# கிருபையுள்ள வார்த்தை ®

**GRACIOUS WORD Luke 4:22**


Vol - 15 December டிசம்பர் 2014

ஆண்டு சந்தா ரூ. 100/- தனிப் பிரதி ரூ. 9/- வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர்: Betty Choate ஆசிரியர்: பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| நன்றி கொடுத்தல் | 3 |
| உங்கள் நித்தியத்தை... | 6 |
| கிறிஸ்தவ ஓட்டம் – 1 | 10 |
| மனந்திரும்பாதபடி பெருமை.. | 15 |
| நடனமாடுதல் | 22 |


*In memory of*
J.C. CHOATE


ஆசிரியர் குழு

*Guest Editors :* **BETTY CHOATE**
**JERRY & PAULA BATES**

*Editor :* **PHILEMON RAJAH**

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.



**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi,
Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**
**"நமக்குள் நன்றியுணர்வை வளர்க்கும் நல்மேய்ப்பரின் வார்த்தை"**

## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**


**ஞாயிறு**
காலை 6.45 மணி
**வெள்ளி**
காலை 6.00 மணி

பாருங்கள் ! பயன் அடையுங்கள் !

செய்தியாளர்கள்:
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

நாகர்கோவில் வாசகர்கள்
**ARK T.V. யில்**
வெள்ளி மாலை - 6.30 மணிக்கு
கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.




Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.80

# நன்றி கொடுத்தல்
## THANKS GIVING



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே ! உங்கள் அனைவருக்கும், ராஜா இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே என்னுடைய வாழ்த்துதலும் ஜெபங்களும். நாம் இந்த ஆண்டின் இறுதியில் உள்ளோம். இன்னும் சில நாட்களில் இந்த ஆண்டினை தேவ தயவினால் கடந்து, புத்தாண்டுக்குள் செல்ல இருக்கிறோம். இந்த நேரத்தில், இந்த ஆண்டு முழுவதும் தேவன் நம்மை ஆச்சரியமாக வழிநடத்தி வந்ததை நினைத்து பார்க்கவும், அவருக்கு 'நன்றி கொடுக்கவும்' மிகவும் கடமைபட்டவர்களாக இருக்கிறோம். ஆகையால், நன்றியை எவ்வாறு கொடுக்கலாம் என்பதை குறித்து தியானிப்பது நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்று நான் கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

தேவன் செய்தவைகளை நினைத்து பார்க்கையில், நம்மில் சிலருக்கு கண்ணீர் வெள்ளமாக பெருக்கெடுக்கும், உதடுகள் நன்றி நன்றி என துதிக்கும். இன்னும் சிலருக்கு வார்த்தைகள் தடுமாறும். எப்படியெல்லாம் நமது நன்றியுணர்வை வெளிப்படுத்தலாம் என்பதைக் குறித்து தியானம் செய்ய, நமது வேதாகமத்தோடு, நமது இருதயத்தையும் திறந்து படிப்போம்.

**1. நன்றி கொடுத்தல் நம் வாழ்வில் ஒவ்வொரு செயலிலும் இருக்க வேண்டும்:**

சங் 103:1-2, "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே!'' நமது செயல்கள் ஒவ்வொன்றும், தேவன் நமக்கு செய்த நன்மைக்கும் கிருபைக்கும் ஏற்ற நன்றியுணர்வினை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

**2. நாம் முன்பு, கிறிஸ்து இல்லாமல் எந்நிலையில் இருந்தோம் என்ற உணர்வானது, நமது நன்றியுணர்வை தூண்ட வேண்டும்.**

எபே 2:2,3,12 "அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில்

இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலேமற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களு மாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்".

பிரியமானவர்களே! தேவனற்ற கடந்த கால பரிதாபகரமான நம்முடைய நிலையானது நமது நன்றியுணர்வை தூண்ட வேண்டும். பாவத்தினால் நரகத்திற்கு ஏதுவான நிலையில், நாம் முற்றிலும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தோம் என்பதையும் கர்த்தர் நம்மை கைவிடாமல் இரட்சித்ததையும் நாம் உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த உணர்வானது நமது நன்றியுணர்வை செயல்படுத்த காரணியாக இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தனது நன்றியுணர்வுமிக்க செயல்களுக்கு இப்படிபட்ட அடிப்படையான காரணத்தை கொண்டிருந்ததாக கூறுகிறார் (1தீமோ 1: 12 – 17).

**3. நேர்மையான நன்றியுணர்வு, நம்மை உலக கவலைகளில் இருந்து விடுதலை செய்யும்.**

2 கொரி 9 : 15, "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.'' தேவன் மீது நன்றியுணர்வு உள்ளவர்களாக இருப்பது உண்மையானல், அது நிச்சயம் நம்மை உலக கவலைகளிலிருந்து விடுவிக்கும். தாவீதும் கூட, தனக்கு தேவன் மேலிருந்த நன்றியுணர்வினிமித்தம் உலக கவலையிலிருந்து விடுதலையானவராக "கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்'' (சங் 136 : 8) என்று கூறுகிறார்.

வேதாகம தேவனிடத்தில் பட்சபாதமில்லை என்ற உண்மையை நாம் அறியும்போது, நமது

நன்றி உணர்வினை முதலில் வார்த்தையாகவும் தொடர்ந்து வாழ்க்கையாகவும் வெளிப்படுத்துவோம். (கொலே 3:15)

நன்றியுணர்வு, உலக கவலையை நம்மை விட்டு விடுவிக்கும் (2 கொரி 8 : 9, 1 தீமோ 6 : 17 – 19). யாக்கோபும் இவ்வாறு கூறுகிறார், “நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை''. (யாக்1:17)

**4. நன்றியுணர்வு என்பது, மிதமிஞ்சிய செயலால் செய்துகாட்டப்படுகிறது.**

யோவான் 12 : 3 – 5, “அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைக் துடைத்தாள் ; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து : ‘இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன’ என்றான்”.

தேவன் மீதுள்ள நன்றியுணர்வை வெளிப்படுத்த, எந்த ஒரு அளவுகோலும் நமக்கு தேவைபடாது. தேவனது கிருபை என்பது நம்மேல் அளவற்றதாக இருப்பதை போலவே, நமது நன்றியுணர்வு என்பதும் குறைவானதாக இல்லாமல் மிதமிஞ்சினதாக இருக்க வேண்டும். சிலருக்கு இந்த செயல்படுகள் மிகவும் ஊதாரித்தனமதக தோன்றலாம். இயேசுவின் பாதத்தில், நன்றி பெருக்கினால் பாவியாகிய அந்த பெண் பரிமள தைலத்தினை ஊற்றி கழுவினபோது, யூதாஸ் அதனை ஆடம்பரமாகவும், ஊதரிதனமாகவும் நினைத்தார். ஆயினும் ஆண்டவர் அந்த பெண்ணின் நன்றியுணர்வுமிக்க அந்த செயலை ஏற்று, அப்பெண்ணை பாராட்டினார். (மாற் 14: 1 – 11, யோவா 12:1–10)

இறுதியாக, பிரியமானவர்களே ! இன்னும் உள்ள சில நாட்களில் உங்கள் நன்றியுணர்வை, எவ்வாறு ‘‘நன்றி கொடுத்தலாக்குவது என முடிவெடுங்கள். அதற்காக ஜெபியுங்கள்! உடனே தாமதமின்றி அதனை செயல்படுத்துங்கள். தேவன் தாமே உங்களது நன்றி கொடுத்தலை ஏற்று, வரப்போகிற புத்தாண்டை நன்மையால் உங்களுக்கு முடிசூட்டுவாராக!

– உங்கள் சகோதரன்

**PCPR** (ஆசிரியர்)

# 25 உங்கள் நித்தியத்தை எங்கு செலவழிப்பீர்கள்?

## WHERE WILL YOU SPEND ETERNITY?



J.C. CHOATE

வாழ்க்கை மிகவும் குறுகியது, மேலும் நீண்ட காலம் ஆவதற்கு முன்பே நாம் அனைவருமே அந்த குளுமையான மரண நதியை கடக்க வேண்டும். இப்பொழுதோ பின்னாளிலோ நாம் சந்தித்தேயாக வேண்டிய ஒரு உண்மை இது. யாரோ ஒருவர் கூறியது என்னவெனில், 'மரணம் என்பது ஒரு மிகச்சிறந்த சமன்படுத்தும் கருவி'; ஏனெனில் யாவருமே இந்த மாம்ச வாழ்வைவிட்டு இந்த உலகில் இருந்து கடந்து செல்ல வேண்டும். ஒருவர் பணக்காரரோ ஏழையோ, படித்தவரோ படியாதவரோ என்பது ஒரு பொருட்டல்ல, எல்லாரும் மரிக்க வேண்டும். இந்த உண்மை மனிதனுடைய இருதயத்தில் வாழும் ஒவ்வொரு நாளும் பதிந்திருக்க வேண்டியதே. ஏவப்பட்ட எழுத்தாளர் உறுதியாகக் கூறுவது *''அன்றியும் ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படையவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே''*, (எபி 9:27) என்கிறார்.

வாழ்க்கை ஒரு புகையை போன்றது
அது சீக்கிரம் கடந்துபோகும்
தேவனுடைய ஜனங்களோ
அந்த கடைசி நாளுக்காக
காத்திருப்பர்.

இந்த வாழ்க்கை முடிந்தபின்பு, நாம் செய்த நன்மை அல்லது தீமை ஆகியவற்றிற்காக நம்மை நியாயந்தீர்க்கும்படி தேவன் நம்மை அவரைச் சுற்றி கூட்டிச் சேர்ப்பார். வெகு நாட்களுக்கு முன்பே இந்த உண்மையை அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியர்களுக்கு விளக்கிக் காட்டியுள்ளார் (2கொரி 5 :10). இதற்கும் முன்னதாக சாலமோன் கூறியிருந்தது, *''ஒவ்வொரு கிரியையையும், அந்த ரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்''* (பிர.12:14). இந்த நாளில் மனிதன், ஒன்று ஜீவனையோ அல்லது தண்டனையோ அடைவார்கள்.

ஆனால் மரணம் மற்றும் நியாயத்தீர்ப்புக்கு பின் என்ன? நாம் எல்லாரும், ஒருபோதும் முடியாத நித்தியத்திற்குள் செல்ல வேண்டும். இந்த மாம்ச வாழ்வில் நம்முடைய செயல்கள் எல்லாம் நீதிக்குரியவைகளானால், நாம் நித்தியமாக இரட்சிக்கப்படுவோம்; ஆனால் நம்முடைய செயல்கள் தீமையானால், அக்கினிக் கடலிலே தள்ளப்படுவோம். ஆண்டவருடன் கூட என்றென்றும் வாழ்வது என்பது எவ்வளவு அருமையானது; மற்றொரு முனையில் நித்தியத்தை சாத்தானுடைய நரகத்தில் செலவிடுவது என்பது எவ்வளவு கொடுமையானது!

அந்த நித்திய நகரத்திலே நாம் ஜீவவிருட்சத்தை பயன்படுத்த முடியும்; ஆனால் நரகத்திலே தீமைசெய்தவர்கள் ***"இரவும் பகலும் சதாகாலமும் வாதிக்கப் படுவார்கள் "*** (வெளி 22:14; 20:10).

பரலோகம் எப்படிப்பட்டதாக இருக்கும்? அது அழகும், இனிமையும் நிறைந்த இடமாக இருக்கும். யோவானுக்கு இதைப்பற்றிய ஒரு தரிசனம் கிடைத்தது; அது அவ்வளவு அருமையாக இருந்தது என்பதை யோவானால் மனிதர்கள் புரிந்து கொள்ளும்படி வார்த்தைகளினால் விவரியாமல், அவர் அதை நமக்கு நன்கு பரீட்சயமான பொருட்களுடன் ஒப்பிட்டு கூறுகிறார். தங்கத்தினாலான தெருக்கள் நிறைந்த பட்டணம், விலையேறப்பெற்ற ஆபரணங்கள், போன்றவை. தேவன் அங்கே தன் குமாரனோடும், அநேக தூதர்களோடும் கூட இருப்பார். எப்பொழுதும் அழகான பாடல்கள் கேட்டுக் கொண்டே இருக்கும்; அதில், இப்படிப்பட்ட நிலையில் அவர்களை வைத்த தேவன் துதிக்கப்படுவார். இந்த பரிசுத்த நகரத்தைப் பற்றி தேவனுடைய மனுஷன் கூறுகையில், ***"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது"*** (வெளி 21 : 4). ஆகையினால் அனைவரும் சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சியினால்

**தேவனது கிருபை என்பது நம்மேல் அளவற்றதாக இருப்பதை போலவே, நமது நன்றியுணர்வு என்பதும் குறைவானதாக இல்லாமல் மிதமிஞ்சினதாக இருக்க வேண்டும்.**

நிறைந்திருப்பார்கள்; ஜீவ விருட்சம் எப்பொழுதும் இருக்கும்; மேலும், நீதிமான்கள் புதிய எருசலேமில் என்றென்றும் இருப்பார்கள்.

சரி, நரகம் எப்படிப்பட்டதாக இருக்கும்? அது வாழமுடியாதபடி ஒரு கொடுமையான இடமாக இருக்கும். பாவம் செய்து தேவபக்தியில்லாமல் பல ஆண்டாண்டு காலமாக வாழ்ந்தவர்கள் அனைவரும், பிசாசு மற்றும் அவனுடைய தூதர்களுடன் அங்கே இருப்பார்கள். ஒவ்வொரு ஆத்துமாவும் அங்கே தொடர்ச்சியாக வாதிக்கப்படும். அங்கே இருந்து தப்பிக்க முடியாத ஒரு இடமாக அது இருக்கும்; அந்த இடம் கொடுமையான இருள் சூழ்ந்ததாக இருக்கும்; ஏனெனில் இந்த உலகின் வெளிச்சம் அங்கே இராது.

இவ்வுலகின் ஒவ்வொரு ஆத்துமாவும் எங்கோ ஒரு இடத்தில் தன் நித்தியத்தை செலவிட வேண்டும் – பரலோகிலோ அல்லது நரகத்திலோ. நடுநிலையுடன் ஒரு இடம் கிடையாது. அதுமட்டுமல்லாமல், தான் எங்கே இருக்கப் போகிறார் என்பதை ஒவ்வொருவரும் தேர்வு செய்ய வேண்டும். ஒருவர் எல்லாவற்றிலும் ஆண்டவரின் சித்தம் செய்து வாழ்ந்தால், ஒரு நாளில் அவர் ஆண்டவருடன் நித்தியமாக இருக்கும்படி செல்லலாம்; ஆனால் ஒருவர் பிசாசை சேவிக்கும்படி முடிவுசெய்தால், வரப்போகிற உலகில் அவனோடு கூடதான் இருக்க வேண்டும். ஆகவே இவையனைத்தும் அந்த தனிநபரை பொறுத்தே உள்ளது; ஆனால் நினைவில் கொள்வோம், சத்தியத்தின் வழியை ஏற்றுக்கொண்டு நித்திய வாழ்வுக்கான வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்ளும்படி ஆண்டவர் ஒவ்வொருவரையும் கெஞ்சுகிறார் (மத் 11:28 – 30).

நித்தியம் என்பது விவரிக்க கடினமான வார்த்தை. அது முடிவில்லாத ஒரு இடமாகையால், மனித மூளை அதின் உண்மையான அர்த்தத்தை உணர முடியாது. நாம் அதை எளிமையாக எவ்வாறு நினைக்க வேண்டுமெனில், இப்பொழுது தான் ஆரம்பமானது என்று எடுத்துக் கொண்டாலும், அது எப்பொழுதும் முடிவின்றி போய் கொண்டிருக்கும்.

**நம் எல்லாருக்கும் தேவனுடைய எண்ணத்தைவிட நம்மைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதே முக்கியமாக இருக்கிறது.**

இதை மனதில் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு ஆத்துமாவும் தன் பாதையில் நடுங்கி, வாழ்வில் தன் நிலையை உணர வேண்டும். நண்பனே, முன்னே உள்ள மகிப்பெரிய நித்தியத்தை யோசித்து பார்க்கையில், வாழ்க்கை என்பது மிகவும் முக்கியமான அல்லது கவனமாக நடக்க வேண்டிய ஒன்று. ஒரு தவறு செய்யக்கூட மனிதன் துணியக்கூடாது.

நீங்கள் உங்கள் நித்தியத்தை எங்கே செலவு செய்யப்போகிறீர்கள்? பரலோகத்திலா, நரகத்திலா? நீங்கள் பரலோகம் செல்ல விரும்பினால், இந்த வாழ்க்கையில் நீங்கள் ஆண்டவருக்கு கீழ்படிய வேண்டும். கடவுளை சந்திக்க ஆயத்தமாகுங்கள். எதிர்கால வாழ்விற்கு ஆயத்தமாகத்தக்கதாக ஒரு வாழ்வை வாழுங்கள். வேறு எந்த முயற்சியும் செய்ய வேண்டாம் என்று நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

# பொதுவான செய்திகள்

1. "இந்த நாட்டில் வாழும் அனைவரும் (கிறிஸ்துவர், முஸ்லிம் மக்கள், மற்ற அனைவரும்) ராமரின் பிள்ளைகளே! இதனை ஏற்று கொள்ளாதவர்கள், இந்தியாவை விட்டு வெளியேறலாம்'' என டிலலியில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் மத்திய தொழில் மற்றும் உணவு துறை அமைச்சர், 'சாத்வி நிரஞ்சன் ஜோதி' பேசினார்.

2. ''செப்டம்பர் மாதம் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க பயணம் மேற்கொண்டிருந்தபோது, அதிபர் பராக் ஒபாமாவுக்கு பகவத்கீதையை பரிசாக அளித்தார். அப்போதே பகவத்கீதைக்கு தேசிய புத்தகம் என்ற அந்தஸ்து கிடைத்து விட்டது. இருப்பினும் அந்த அந்தஸ்தை முறைப்படி அளிக்க இன்னும் சில நடை முறைகள் மட்டுமே உள்ளன. விரைவில் கீதையை தேசிய புத்தகமாக அறிவிக்க பிரதமர் மோடியை வலியுறுத்துவேன். பார்லிமென்டிலேயே 'பகவத்கீதையை' தேசிய புனித புத்தகமாக அறிவிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தேன்". இவ்வாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் 'சுஷ்மா சுவராஜ்' கூறினார்.

3. எல்லா பள்ளிகளிலும் ஜெர்மன் மொழிக்கு பதிலாக சமஸ்கிருதம் கற்பிக்க வேண்டும் – மத்திய அரசு உத்தரவு.

"இது சிந்திக்கும் காலம் – செயல்படும் நேரம் – மௌனமாயிராதே! "

# 7 கிறிஸ்தவ ஓட்டம் – 1



- சகோ. P.R. சாமி (பெங்களூரு)

எபிரேயருக்கு எழுதின ஆசிரியர், ஒரு கிறிஸ்தவன் தன் விசுவாச ஓட்டத்தை ஓடி, வெற்றி காண என்ன யுக்தியை கையாள வேண்டும் என்று எபி. 12 : 1 – 3ல் கூறுகிறார். அதை இம்மாத பாடத்தில் பார்ப்போம். "ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நம்மைச்சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். (எபி. 12:1–3)

**முதலில் பாரமான யாவற்றையும், பாவத்தையும் தள்ளி விட்டு:**

ஒரு நல்ல கிறிஸ்தவனுடைய ஜீவியத்தை ஒரு ஓட்ட பந்தயத்திற்கு ஒப்பனையாக கூறுகிறார் எபிரேய ஆசிரியர். ஓட்டப் பந்தய வீரனுக்கு பயிற்சி மிக அவசியம். ஒரு வீரனுடைய வாழ்க்கையிலே கட்டுப்பாடு. கடுமையான பயிற்சி என்பது கஷ்டமானது தான். ஆனால் தவிர்க்க முடியாதது. ஒரு Champion-ஆக, சிறந்த வீரனாக மாறுவதற்கு உடம்பின் ஒவ்வொரு துளி வியர்வையும் சிந்தி, எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டியது மிக முக்கியம். அவன் வெற்றி பெற இதைச் செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். இவனுக்கு முன்பு இருந்த வீரர்களும் அப்படியே செய்தனர். வெற்றி பெற்றனர். தானும் அவர்கள் முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவனுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, தெரிந்திருப்பது என்னவெனில், பெரிய வீரர்களுக்குத் தெரியும் ஊளை சதையையோ, பாரமான உடைகளையோ தூக்கி ஒடுவது என்பது அறீவீனம் என்றும் பெரிய

பந்தயங்களில் வீரர்கள் மயிரிழையில் முந்தி வெற்றி பெறுவார்கள். என்றும் அவர்கட்கு தெரியும். ஒரு சிறு விஷயத்தில் ஏனேதானோ வென்று இருந்துவிட்டால் அது வெற்றியை எவ்வளவு பாதிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கிறிஸ்தவன் தன் ஓட்டத்தில் வெற்றி பெறாமல் தடை செய்யும் பாவம், எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதை அனுமதிக்கக் கூடாது.

அப்புறப்படுத்த முனையை வேண்டும். கண்ணில் ஒரு சிறு தூசி விழுந்தாலும் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். பார்வையை எந்த மட்டும் பாதிக்கிறது. உலக ஆசா பாசங்கள், சிற்றின்பங்களும் கூட முடிவில் பெரிய பாவத்தை போல கிறிஸ்தவனுடைய ஓட்டத்தை பாதிக்கக்கூடும். அவை நாம் நினைக்கும் விபசாரம், கொலை, இவைகளாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. கெட்ட சிந்தனையை தூண்டக்கூடிய சில புத்தகங்கள், காட்சிகள், கெட்ட சகவாசம், ஆகாத சம்பாஷணை இவைகளே போதும். இங்கு, போட்டியில் இறங்கியிருக்கும் கிறிஸ்தவனை, நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள தன்னை ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கும் விசுவாசியை, மனதில் வைத்து எபிரேய ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார். மனப்பூர்வமாய் பாவம் செய்து, கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையிலறையும், போலி கிறிஸ்தவர்களை குறிப்பிட்டு அல்ல.

பவுல் அப்போஸ்தலனும் கொரிந்தியருக்கு எழுதின நிரூபத்தில், கிறிஸ்தவ ஜீவியத்தை ஒரு ஒட்ட பந்தயத்துக்கு ஒப்பனையாக உருவகப்படுத்தி சொல்கின்றார். ''பந்தயசாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள். ஆயினும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படி செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக

**உண்மையான மனந்திரும்புதலுக்கு இருக்கும்**
**மிகப்பெரிய தடை, பெருமையே!**

ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிச் கீழ்படுத்துகிறேன்" என்றார். இன்னும் இரண்டு இடங்களில், பந்தயம் ஓடுகிறவர்களை உருவகப்படுத்தி பேசுகிறார். சட்டத்தின்படி செய்யாவிட்டால் வெற்றிபெற முடியாது. போட்டியின் விதிகளை அனுசரித்து செல்வதே வெற்றிக்குரிய நிபந்தனைகள் என்கிறார். "மேலும் ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடி சூட்டப்படான் (2 தீமோ 2 : 5). கலந்து கொள்கிறவர்கள் எல்லாரும் இறுதிவரை ஒடமாட்டார்கள். கலாத்திய கிறிஸ்தவர்களைப் பார்த்து ''நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, சத்தியத்துக்கு கீழ்படியாமறபோக உங்களுக்கு தடை செய்தவன் யார்?" என்கிறார்.

எபிரேயருக்கு எழுதின ஆசிரியர், கிறிஸ்தவர்கள், "பொறுமையோடு ஓட வேண்டும்'' என்றார். கிறிஸ்தவ ஓட்டத்தில், ஒரு விசுவாசி, பாரமான யாவற்றையும், தடையாக நிற்கும் எதையும் தள்ளி விட வேண்டும். ஆனால், இது மாத்திரம் வெற்றியை தந்து விடாது. அதற்கு பிறகு, தனக்கு முன்பாக நியமித்திருக்கிற ஓட்டத்திலே பொறுமையோடு ஓட வேண்டும்.

ஒருவன் ஒரு இடத்தில் செயல்படும் அனேக காரியங்களை, வேறு இடத்தில் செயலாற்ற முடியாது. தனக்கு முன்பாக நியமித்திருக்கிற அந்த குறிப்பிட்ட ஓட்டத்தை, ஒரு கிறிஸ்தவன் ஒடி முடிக்க வேண்டும். பாதியில் திசையை மாற்றவோ, சட்டத்தை மாற்றவோ கூடாது. தேவன் நம்மை அழைத்து ஒரு குறிப்பிட்ட ஓட்டத்தை நியமித்திருக்கிறார். அது என்னவென்றால், எப்பொழுது ஒருவன் கிறிஸ்தவனாக மாற தேர்ந்தெடுகின்றானோ அன்றே கிறிஸ்துவ ஓட்டத்தை ஓடவும் தேர்ந்தெடுக்கிறான். ஒருமுறை ஓட்டத்தில் இறங்கிவிட்டால் ஓடி முடிக்க வேண்டுமே தவிர, பாதியில் நின்று விடக்கூடாது. அதற்கு விடாமுயற்சி அவசியம். இங்கு பொறுமையின் சாதனையைப் பார்க்கிறோம். குறிக்கோளை அடைய தவறோடும் சாத்தானோடும் ஒத்துபோகாமல், தொடர்ந்து ஓட, பொறுமை உதவி செய்கிறது.

**வேதாகமம் நம்மை கடைசி வரை ஆயத்தமாயிருங்கள் என்கிறதே தவிர கடைசி நேரத்தில் ஆயத்தப்பட சொல்லவில்லை (மத் 25:1-10)**

இயேசுவும், முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே ரட்சிக்கப்படுவான் என்கிறார். கிறிஸ்துவே, நம் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிப்பவருமாயிருக்கிறார் என்று எபிரேய ஆசிரியர் குறிப்பிட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். கிறிஸ்தவன் தன் ஓட்டத்தில் தன் கண்களை கிறிஸ்துவுக்கு நேராக செலுத்த வேண்டும். எதற்கு? அவரைப் போல பொறுமையோடே ஓடுவதற்கு. அவர் தாமே அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து, தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். கிறிஸ்துவே விசுவாசத்தை முடிக்கிறவருமா யிருக்கிறார். அப்படி என்றால், கிறிஸ்தவனிடத்தில் விசுவாசம் உற்பத்தியாக காரணமாயிருந்தவர் அது பூரணப்படவும் அவனுக்கு உதவி செய்ய வல்லவராயுமிருக்கிறார். அது மாத்திரமல்ல, ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவன் தேவனுடைய கரத்தில் இருக்கின்றான். கிறிஸ்துவும், தன்னை கோர சிலுவையில் ஒப்பு கொடுத்தார். சொல்லொனா வாதைகளை அனுபவித்தார். சிலுவையை சகித்தார்; மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று மோசேயின் நியாயப் பிரமாணம் குறிப்பிடுகிறது. இயேசு, சிலுவையில் ஆணிகளால் அறைப்பட்டார். அது அருவருக்கத்தக்க அவமானத்துக்குரிய மரணம். ஆனால் மனுகுலத்தை ரட்சிக்க ஆண்டவர் இயேசு கிறிஸ்து அந்த அவமானத்தையும் தாங்க முன் வந்தார்.

அந்த முன் மாதிரி, ஒரு கிறிஸ்தவன் தன் ஓட்டத்தில் தொடர்ந்து பொறுமையோடு செல்ல உற்சாகப்படுத்துகிறது. கிறிஸ்தவர்கள் இயேசுவையே நோக்கிப் பார்க்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். எபிரேயருக்கு எழுதப்பட்ட நிரூபம், அந்நாளைய கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து உற்சாகம் பெறவே! கொடூரமான அவதூறான வார்த்தைகள் ஒரு மனிதனுடைய இதயத்தை புண்படுத்தும். அது அவ்வளவு சீக்கிரம் மறைந்து விடாது. மறக்கவும் முடியாது. சரீர பிரகாரமான துன்புறுத்தப்படுதல் எந்த சூழ்நிலையிலும் ஒரு மனிதனுக்கு பழி வாங்கும் எண்ணத்தைத்தான் தூண்டும். எபிரேய கிறிஸ்தவர்கள் ஒரு வேளை யூதர்களால் இவ்விதம் தாக்கப்பட்டு, அவமானம் தாங்காமல், திரும்பவும் யூதமார்க்கத்திற்கு சென்று

**நடனம் என்பதை ஜனங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தவே செய்தார்களே, தவிர தேவனை மகிமைபடுத்த செய்யவில்லை (யாத் 15:20)**

விடலாமா என்று எண்ணியிருப்பார்கள். ஆத்துமாவில் சோர்ந்து போக வேண்டாம் என்றே கிறிஸ்தவர்களுக்கு கூறப்பட்டிருக்கிறது. எவ்வளவு பாடுபட்டாலும் ரத்தத்தை கக்கிக் கொண்டாவது ஒரு வீரன் எப்படி ஓட்டப்பந்தயத்தில் கடைசி வரை ஓடி முடிக்கிறானோ, அப்படியே ஒருவேளை வெற்றி பெற்று உடனே விழுந்து செத்து போனாலும் கடைசிவரை தன் உற்சாகத்தையும் முயற்சியையும் விட்டுக் கொடுக்காமல் வெற்றியை நோக்கி செலுத்திய பெருமை அவனுக்கு கிடைக்குமல்லவா?

அப்படித்தான் கிறிஸ்தவ ஜீவியமும். ஒருவேளை, சோதனைகளை தாங்கி தாங்கி பிசாசானவனுடன் போரிட்டு பலவத துன்பங்கள் துயரங்கள் அவனை அடித்து நொறுக்கி ஒரு கிறிஸ்தவனை நிர் மூலமாக்கலாம். பல வேளைகளில் பாவச் சேற்றினில் விழுந்து, அதன் பிரதிபலனை அனுபவிக்கலாம். அவமானப் படுகுழியில் தள்ளப்பட்டு, வீணாக குற்றம் சாட்டப்பட்டு வதைக்கப்படலாம். இப்படிப்பட்ட போராட்டங்களினிமித்தம் உடல் ஆரோக்கியம் இழந்து பல வியாதிகளால் தொய்ந்து போகலாம். எல்லோராலும் கைவிடப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்படலாம்.

அன்புள்ள நண்பனே! கிறிஸ்தவ போராட்டங்களை கண்டு அஞ்ச வேண்டாம். அதினால் வரும் பலனைப் பார்த்தாயா? வெற்றி ! முடிவு வரை நிலைத்திருப்பவனுக்கு வாடாத ஜீவகிரீடம்! தேவனுடன் நித்திய வாழ்வு! நீயும் இப்படிப்பட்ட சிலாக்கியங்களை பெற விரும்பினால், உன்னை தேவனுடைய கரத்தில் ஒப்புவி. அவர் சித்தத்தை செய். ரட்சிப்பிற்கு அவர் தந்திருக்கும் நிபந்தனைகளுக்கும் கீழ்படி. தேவன் கிறிஸ்துவுக்குள் உன்னை ரட்சிப்பார். மரணபரியந்தம் உண்மையுள்ளவனாக உன் கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடி முடித்தால், இவ்வுலகில் பரிபூரண ஜீவனையும், மறுமையில் நித்திய வாடாத ஜீவ கிரீடத்தையும் பெறுவாய்.

**நடனம் என்பது தேவனை மகிமையடையவோ,**
**மகிழ்ச்சியடையவோ செய்வதில்லை. அப்படி இருந்திருந்தால்,**
**கிறிஸ்து செய்திருப்பாரே!**
**முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் செய்திருப்பார்களே ! (கொலே 3:17)**

## Is Pride Preventing You From Repenting?

# மனந்திரும்பாதபடி பெருமை உங்களை தடுக்கின்றதா?



Jerry Bates

தேவன் எப்பொழுதுமே மனந்திரும்புதலை எதிர்பார்க்கிறார். தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவரின் செய்தியினுடைய சாராம்சமே மனந்திரும்ப வேண்டும் என்ற கட்டளையே! உதாரணமாக எசேக்கியேல் 14 : 6ல், “ஆகையால், நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி : திரும்புங்கள், உங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டுத் திரும்புங்கள்; உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.'' என்று எசேக்கியேல் கூறினார். நினிவே பட்டணம் மனந்திரும்ப வேண்டும் என்ற எழுதப்பட்ட கட்டளையை நாம் பார்க்காவிட்டாலும், யோனாவின் பிரசங்கத்தினால் அந்தப் பட்டணத்தார் மனந்திரும்பியதின் மூலம், அவர் மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்தார் என அறிகிறோம்.

இயேசு மற்றும் யோவான் ஸ்நானகனின் செய்திகளானதும் கூட, “மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது” (மத் 4 : 17) என்பதே! “அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். (லூக் 13 : 3) என்று இயேசு கூறியதில் இருந்து நாம், ஒவ்வொரு மனிதனும் மனந்திரும்ப வேண்டும் என இயேசு வலியுறுத்துவதை அறிகிறோம். மற்றொரு வார்த்தையில் சொல்வோமானால், கிறிஸ்து, மக்கள் முன்பு ஒரு தேர்வை செய்யுப்படி முன் வைக்கிறார்; மனந்திரும்புங்கள் அல்லது அழிந்துபோங்கள். அப்போஸ்தலர்களும் மனந்திரும்புதலைக் குறித்து பேசினார்கள். உதாரணமாக பேதுரு எழுதுகையில், “தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்”.

பைபிளில் உள்ள கடினமான கட்டளை ‘மனந்திரும்பு’ என்பதே, என நான் வாசித்துள்ளேன். ‘‘மனிதனுடைய இரட்சிப்பிற்கான மிகப்பெரிய முட்டுக்கட்டை (தடை), அவனுடைய விரும்பம் என்னும் தடையே” என்று மெக்கார்வி எழுதினார். உண்மையில் மனந்திரும்புதல் என்பது கீழ்படிய

கடினமான ஒன்றுதான்; ஏனெனில், மனந்திரும்புதல் என்பது முழு மாற்றத்தை எதிர்பார்க்கிறது; விரும்பத்தை, சிந்தனையை, உணர்வை மாற்றும்படி கேட்கிறது. ஒரு மனிதன் இப்படிப்பட்ட முழுமையான மாற்றத்தை கொண்டுவருவது என்பது மிகவும் கடினமே. இது கடினமான ஒன்று என்பதினாலேயே, அநேகர் மனந்திரும்புதலை பிரசங்கிக்க தவிர்ப்பது ஒரு காரணமாகும்.

சரி, இப்படிப்பட்ட மாற்றத்தை கொண்டுவருவது ஏன் மனிதனுக்கு கடினமான ஒன்று? அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். மனந்திரும்புதல் என்பது முழுமையாக சரணடைவதை, முழுமையாக தேவனிடத்திலும் அவருடைய கற்பனைகளிடத்திலும் அற்பனிப்பதாகும். மனந்திரும்புதல் என்பது யாரோ ஒருவரிடம் (தேவன்) நம்மை அற்பனிப்பதால், வேறு யாருக்கும் முழுமையாக நம்மை அற்பணிப்பது கூடாதது ஆகும். மக்கள் அநேக நேரங்களில் தங்களை 'அற்பனித்துள்ளோம்' என்று கூறுகின்றனர் ; ஆனால் உண்மையில் அவர்கள் வேறு ஒரு நல்ல வாய்ப்பு வரும்வரை மட்டுமே, அவ்வாறு தங்களை அற்பணிக்கின்றனர். அது உண்மையிலேயே ஒரு உண்மையான அற்பனிப்பு அல்ல; நிச்சயமாக அது முழுமையான அற்பனிப்பு அல்ல.

மனந்திரும்புதல் கடினமானது, ஏனெனில் அது 'உடனடியாக' முழுமையான மாற்றத்தை எதிர்பார்க்கிறது.

மனந்திரும்புதல் என்பது, ஒரு மனிதர் ஒரு பாவத்தை விட்டு விட்டு, பின்பு மற்றொன்றை விட்டுவிடுவது போன்ற படிப்படியான ஒரு நிகழ்வு அல்ல. பாவத்திலிருந்து மனந்திரும்புதல் என்பது, உடனடியாக துண்டிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறது. அதினால் ஒருவர் மறுபடியும் பாவமே செய்ய மாட்டார், அல்லது பழைய பாவங்களில் விழமாட்டார் என்று அர்த்தமல்ல. நிச்சயமாக அவர் செய்வார்; ஆனாலும், பாவத்தைக் குறித்ததான அவருடைய மனோநிலை இப்பொழுது மாறிவிட்டது. ஒரு குறிப்பிட்ட பாவத்தை செய்வதில் இனியும் அவர் திருப்தியடைவதில்லை. அநேக வேளைகளில் ஜனங்கள், தாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதாக கூறுவதுண்டு ; ஆனாலும், அவர்கள் அதிகம் விரும்பும் ஒன்று அல்லது அதிகமான, குறிப்பிட்ட பாவங்களை விடாமல்

**மனந்திரும்புதல் என்பது மன்னிப்பு கோரும்**
**விண்ணப்பம் மட்டுமல்ல, அது கனிதரும் வாழ்வு (மத் 3:8)**

பிடித்துக்கொண்டு இருப்பார்கள். இப்படிப்பட்ட செயல் மனந்திரும்புதலும் அல்ல, இது கிறிஸ்துவை சந்தோஷப்படுத்தும் செயலும் அல்ல. மாயவித்தை மற்றும் மந்திரவாத செயல்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்த எபேசு பட்டணத்து மக்கள், சுவிசேஷ வசனத்தைக் கேட்டு அதற்கு கீழ்படிந்தபோது, அவர்கள் உடனடியாக அது சம்பந்தமான புத்தங்களை எரித்துவிட்டனர் (அப்.19:19). 2 கொரி 5:17ல் பவுல், ''மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது " என்று கூறுகிறார்.

மனந்திரும்புதலோடே தொடர்பு உடையது தான், பாவத்தை அறிக்கை செய்வதும் ஆகும்; பாவம் எப்படி வெளியரங்கமானதோ, அதைப்போலவே பாவ அறிக்கையும், அந்த அறிக்கையை செயலில் காட்டுவதும் வெளிப்படையாக இருக்க வேண்டும். ''நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." என்று யாக் 5 : 16ல் நாம் வாசிக்கின்றோம். நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், நாம் ஒருவருக்கொருவர் நம்முடைய பாவங்களை அறிக்கை பண்ணும்படி ஊக்கப்படுத்தப்படுகிறோம்; மூப்பர்களிடமோ, பிரசங்கியார்களிடமோ, அல்லது பாதிரியார் போன்றவர்களிடமோ மட்டுமல்ல; எல்லாருமே எல்லாருக்காகவும் ஜெபிக்க கேட்கப்படுகிறது. நாம் பகிரங்கமாக செய்த பாவங்களில் இருந்து மனந்திரும்பிவிட்டோம் என்று அதை அறிக்கை செய்யாத வரை, எவ்வாறு ஒருவர் அறிந்து கொள்ள முடியும்?

அறிக்கை பண்ணுதல் என்பது நிறைய மக்களுக்கு ஒரு சவாலான செயலாக இருக்கின்றது.

அநேகமான, உண்மையான மனந்திரும்புதலுக்கு இருக்கும் மிகப்பெரிய தடை, பெருமையே! ஏனெனில், நாம் பாவம் செய்துவிட்டோம் என்று ஒப்புக்கொள்ள, 'பெருமையே' நம்மை தடுக்கின்றது. அதுமட்டுமல்ல, அப்படியே நாம் தவறு செய்துவிட்டோம் என்று

**பெருமை என்பது தேவனுக்கு எதிரானது**
**ஆகையால் தான் நம்மை தேவனிடம் திரும்பாமல் தடுக்கிறது.**

ஒப்புக்கொண்டாலும், நம்முடைய பெருமையே நம்மை அந்த தவறுக்கு சாக்குபோக்கு அல்லது காரணத்தை கூற வைக்கின்றது. இந்த சாக்குபோக்குகள் நம்முடைய மனந்திரும்புதலை அடையாளப்படுத்தாமல், அந்த தவறை (பாவத்தை) ஏன் செய்தோம், எதற்கு செய்தோம் என நியாயப்படுத்துவதையே காட்டுகிறது. மற்றொரு வார்த்தையில் சொன்னால், மற்றவர்கள் நம்மைப்போன்ற சூழ்நிலையில் இருந்தார்களேயானால், நம்மைப்போலவே செய்வார்கள் என்ற நினைப்பையே நாம் அவர்களுக்கு கொடுக்கிறோம்.

சபைகளில் பொதுவான பாவ அறிக்கையானது மிகவும் அரிதானதாவே உள்ளது; அதுவும் சில கலாச்சார மக்களிடம் அப்படி இல்லவே இல்லை. அதன் காரணம் என்ன தெரியுமா? ஒருவர் தன்னுடைய வாழ்வின் பாவங்களை பகிரங்கமாக அறிக்கை செய்தால், அவர் 'மதிப்பை' இழந்துவிடுவார் என்பதே!

தேவன் நம்மிடம் விரும்புவதை செய்ய முடியாதபடி மனிதனை பெருமையே எப்பொழுதும் தடுக்கின்றது. மற்றொரு வார்த்தையில் சொன்னால், நம் எல்லாருக்கும் தேவனுடைய எண்ணத்தைவிட நம்மைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதே முக்கியம். உண்மையில், ஒருவர் தன்னுடைய பாவத்தை பகிரங்கமாக அறிக்கை செய்வதினால், அவருடைய மதிப்பு உயரவே செய்யும். ஒருவர் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்யும் தைரியத்தினால் மற்றவர்கள் தொடப்பட்டு, அவர்களும் அப்படிப்பட்ட செயலை செய்ய தூண்டப்படுவார்கள்; ஏனெனில், நாம் ஒப்புக்கொண்டாலும் இல்லாவிட்டாலும், எல்லாருமே பாவத்தினால் பாடுபடுகின்றோம். நமக்கு மற்ற கிறிஸ்தவர்களின் உதவியும், ஊக்கமும் நிச்சயமாக தேவை.

எல்லா கிறிஸ்தவர்களும் பாவத்தினால் அவதிப்படுவதினால், நம்முடைய வாழ்வில் நாம் செய்யும் பாவங்களை அறிக்கை செய்ய நாம் பயப்படவோ, வெட்கப்படவோ கூடாது.

இப்படி செய்வது, மற்ற கிறிஸ்தவர்களின் உதவியை நமக்கு கிடைக்கச் செய்வது மட்டுமின்றி, நமக்கு மிகப்பெரிய உதவியாய் இருக்க வல்லவரான நம்முடைய தேவனையும் நம்முடைய இச்செயல் சந்தோஷப்படுத்தும். பிரியமானவர்களே ! தேவன் நம்மிடம் விரும்புவதை நாம் செய்யாதபடி நம்முடைய பெருமை தடைசெய்ய விடாதீர்கள்!

– **கிங்ஸ்லி ராஜா** (தமிழில்)

# ஆவியானவர் சபையில் சாட்சி கொடுக்கச் சொல்லுகிறாரா?

**பிரியமுள்ளவர்களே!**

கடந்த இதழில் இத்தலைப்புக் கொடுக்கப்பட்டு, கீழே, வந்த செய்தியில் நகை அணியலாமா? என்று கருத்து இடம் பெற்றிருந்தது. தவறுக்கு வருந்துகிறேன். தயவு செய்து "கிறிஸ்தவர்கள் நகை அணியலாமா?" என்று தலைப்பை, அக்கட்டுரைக்கு எடுத்துக் கொள்ளவும் – E.A.

இப்பொழுது நாம் பார்க்கப்போகும் தலைப்பு "கிறிஸ்தவர்கள் சபையில் சாட்சி கொடுக்கலாமா? பரிசுத்த ஆவியை நேரடியாகப் பெறுவதாக பல புரட்டுக்களையும் குழப்பங்களையும் கொண்டிருக்கும் பிரிவுக் கூட்டத்தார், தங்களுடைய கூட்டம் கூடும் பொழுதெல்லாம் சாட்சி கொடுக்கிறோம் எனும் பெயரில் நேரத்தை போக்குவதோடு, தேவனுடைய நன்மைகளை பரியாசம் பண்ணுவது போல் நடந்து கொள்கின்றனர். சாட்சி கொடுத்தல் என்றால் என்ன?

ஏதோ ஒரு நிகழ்ச்சியை நடக்கும்போது, நடந்த இடத்தில் இருந்து நடந்ததை அப்படியே சொல்லுவதற்கு பெயர்தான் சாட்சி. இயேசுவின் வாழ்வையும், வார்த்தையையும், கிரியைகளையும் நேரடியாக கண்டவர்கள் மட்டுமே அவருக்குச் சாட்சியாக இருக்க முடியும். (அப். 1: 21, 22). இவ்வகையில் 12 அப்போஸ்தலர்களும் மட்டுமே சாட்சியாக இருக்க முடியும் யூதாஸ் இறந்தபோது அவனுடைய ஸ்தானத்தில் நியமிக்கப்பட தகுதியுடையவராக இரண்டு பேரை ஜனங்கள் நியமித்தார்கள், கர்த்தர் தெரிந்து கொண்டது ஒருவர் மட்டுமே. இந்த அப்போஸ்தலர்கள் இயேசுவுக்காக, இயேசுவால், தகுதியோடு நியமிக்கப்பட்ட சாட்சிகள் (அப். 1: 21, 22; யோவ 15: 26, 27). இன்று ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று அந்நிய பாஷை, அற்புத அடையாளம், தீர்க்கதரிசனம் உரைத்தல் போன்ற வரங்களைக் கொண்டிருப்பதாக பிதற்றும் கூட்டத்தாரில், சிலர் தங்களை "அப்போஸ்தல பாஸ்டர்" என அனத்துக் கொள்கின்றனர். இவர்களுக்கு இப்படி அப்போஸ்தல பட்டத்தைத் தரிக்கவோ, சபையிலே சாட்சி சொல்லவும், சாட்சி கொடுக்க வைக்கவும் ஆவியானவர் கட்டளையிட்டுள்ளாரா? சாட்சி கொடுத்தலைக் குறித்து இயேசுவின் கருத்து என்ன?

யோவான் 5ம் அதிகாரத்தில் வசனம் 31ல்இருந்து 39 வரை இயேசு சொல்லுகிறார்,

1. இயேசு தம்மைக் குறித்து தாமே சாட்சி கொடுத்தால் “அது மெய்யாயிராது” என்றார் (வச.31); அதாவது தமது தாழ்மையைக் காட்டுகிறார்.

2. அடுத்து பரிசுத்த ஆவியின் சாட்சி (வச. 32; யோவ 1 : 33 ; 15 : 26). அது மெய்யான சாட்சிதான், ஆனால் அது தொடரவில்லை.

3. மூன்றாவதாக, யோவானின் சாட்சி (யோவ. 1:34, 5:33 - 36).

4. இயேசு ஏற்றுக்கொள்ளும் சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல (வச. 34).

5. மேலும் கிறிஸ்து செய்த (அற்புத) கிரியைகள் அவருக்கு சாட்சி கொடுத்தன (யோவ 5 : 36; 20 : 30, 31). அவைகளே இரட்சிப்புக்கு போதுமானவை.

6. பிதா தாமே சாட்சி கொடுத்தார் (யோவ. 5 : 37, 38 ; மத் 3 : 16, 17; 17 : 5).

இந்த ஆறில் எதுவும் இப்பொழுது செயல் பாட்டில் இருக்கிறதா? அடுத்தது நாம் பார்க்க இருக்கும் சாட்சி (7) மட்டுமே இன்று கிறிஸ்தவர்களுக்கு வழிகாட்டவும் கிறிஸ்தவர்களல்லாதோர் கிறிஸ்துவைப் பார்க்கவும் இருக்கிற சாட்சியாக இருக்கிறது.

7. அது வேத வாக்கியங்கள். இந்த வேத வாக்கியங்களே மேற்குறித்த ஆறு சாட்சிகளுக்கும் சாட்சியளிக்கிறது. நம்முடைய விசுவாசத்தை கட்டியெழுப்பி நித்திய ஜீவனுக்கு வழி நடத்துகிறது (யோவ 5: 39). அவை உண்மையும் (சத்தியமும்), பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்.19:7). தங்கள் சாட்சிகளை மனுஷர்கள் கொடுத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், திருமறையின் சாட்சியை கற்கலாமே? (சங் 1 : 2-3).

‘‘நான் ஏற்றுக்கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல, நீங்கள் இரட்சிக்கப்படும் படியாகவே இவைகளைச் சொல்லுகிறேன்”, (யோ 5:34), என்றார் இயேசு. கிறிஸ்துவின் வருகையின் நோக்கம் பாவிகளை இரட்சிப்பதுதான் (1 தீமோ 1:15). எல்லா மனுஷரும் இரட்சிக்கபட வேண்டும் என்பதும், ‘‘சத்தியத்தை’’ (சாட்சியை அல்ல) அறியும் அறிவை அடைய வேண்டும் என்பதும், தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தீமோ 2 : 4).

“சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” என்றும்

**ஆவிக்குரிய தேவன் நடனம் புரிய சொல்லி வேதாகமத்தில் எந்த கட்டளையும் கொடுக்கவில்லை ஏனெனில் நடனம் என்பது ஆவிக்குரியது அல்ல. (கலா 5:19-21)**

சொன்னார் (யோவ 8:24).சாட்சி கொடுத்தல் விடுதலையாக்குவதில்லை. இயேசு தம்மைக்குறித்து சாட்சி கொடுப்பதை ஏற்றுக்கொள்ளாதபோது, மனுஷர் தங்களைக் குறித்து, கட்டாயத்தின் பேரில், சில வேளைகளில் கற்பனையாகக் கூட புனைந்து சாட்சி கொடுப்பதுண்டு; அப்படிப்பட்ட சாட்சிகளை ஏற்றுக்கொள்வாரா?

பவுல் தன்னைக்குறித்து அப். 9 : 22, 26 அதிகாரங்களில் சாட்சி கொடுத்தாரே!

பவுல், தான் எப்படி ஆண்டவரை தரிசத்து ஏற்றுக் கொண்டார் என்று தன்னிலை விளக்கத்தை மேற்குறித்த அதிகாரங்களில் சொல்லிக் கொண்டிருப்பது உண்மைதான். இதை சாட்சி என்று பெயர் கொடுத்தாலும், கீழ்வரும் காரணங்களால் அது தவறல்ல.

1. மற்ற அப்போஸ்தலருக்கு சமமாக அவர் சாட்சி கொடுத்தது கர்த்தர் சொன்னதுதான் (யோவ. 15 : 26, 27) இது பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்ட, உடன் சாட்சி. இது போன்று இன்று, ஆவியின் சாட்சியத்துடன் சேர்ந்து யாரும் சாட்சி கொடுப்பதில்லை. மேலும் பவுலைப் போலவும், மற்ற அப்போஸ்தலர்களைப் போலவும், அப்.1: 21, 22ன்படி குணாதிசயங்களை பெற்றவர் எவரும் இன்று இல்லையே.

2. மேலும் இது, கூடிவந்த ஆராதனைக் கூட்டத்தில் (தொழுகையில்) ஒரு பாகமாக சாட்சி கொடுக்கவில்லை. மாறாக, மத்தேயு 10 : 16-20 படி பேசுகிறார். ஆராதனையில் ஒரு பாகமாக யாரும், எப்போதும், எங்கேயும் புதிய ஏற்பாட்டில் இப்படி சாட்சி கொடுத்தற்கான ஆதாரம் இல்லை.

3. அதுவும் கிறிஸ்துவை தான் எப்படி ஏற்றுக் கொண்டார் என்பது குறித்து, அவர் "சாட்சி" கொடுத்தார். முள் குத்தி குணமானதுக்கும், திருட்டு ரயிலில் (டிக்கெட் இல்லாமல்) பயணம் பண்ணி பிடிபடாமல் இருந்ததற்கும், பேருந்தில் படியில் நின்று பயணம் பண்ணினபோது தான் விழவிருந்த நிலையில், கூட இருந்தவர்களால் காப்பாற்றப்பட்டதும் ஆகியவைகளை, சாட்சியாக சொல்லிக் கொண்டிருக்கவில்லை.

ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் இன்று சாட்சி சொல்ல யாரையும் ஏவவில்லை. இன்னும் எத்தனை அபத்தங்கள்!

**E.A. ஆறுமுகம் (போதகர்)**
திண்டுக்கல்

**நம்முடைய தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன் என்பது போல திக்கற்றவர்களின் தேவனாகவும் இருக்கிறார். (உபா 10:18; 27:19)**

# நடனமாடுதல்

மகிழ்ச்சி தரும் செயல்களை தேவன், மனிதனிடத்தில் இருந்து பிரித்து வைக்க விரும்பிவில்லை. ஆனால் அவை மனிதனுக்கு சரியானதாகவும், நன்மையயானதாகவும் இருக்க வேண்டும். சிலர் இப்படி நினைப்பதுண்டு, 'கிறிஸ்தவர்களாக இருந்தா நமக்கு கொஞ்சம் கூட மகிழ்ச்சியே கிடையாது' என்று. அது உண்மையல்ல. நடனம் என்பது, தற்காலிக உலகின் ஒரு முக்கியமான பகுதியாகும்; மேலும் அதைக்குறித்து நாம் வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய வேண்டும்.

முதலாவதாக, வேதாகமம் இரண்டு வகையான நடனங்களைப் பற்றி பேசுகிறது என்பதை கவனிப்போம். முதலாவது வகையானது, இஸ்ரவேல் புத்திரர் செங்கடலைக் கடந்து கானான் தேசத்திற்குள் சென்றபோது செய்தது. "ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக் கொண்டாள்; சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப் போனார்கள் (யாத் 15 : 20) என்று வாசிக்கிறோம். ஆகையால், தேவன் தன்னுடைய ஜனங்களுக்குள் இப்படிப்பட்ட நடனத்தை அனுமதித்ததைப் பார்க்கிறோம். இது ஒரு ஆவிக்குரிய பண்பின் வெளிப்பாடாகவே இருந்தது.

மற்றொரு வகையான நடனமானது, யாத் 32:19ல் விளக்கப்பட்டுள்ளது, ''அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டு; "சீனாய் மலையில் பத்து கட்டளைகளை பெறுகிறவராக மோசே இருக்கையில், தேவ ஜனங்கள் சிலை வழிபாட்டை செய்ததை அவர் காண்கிறார். இங்கே நடனமானது விக்கிரக ஆராதனையுடன் தொடர்புடையதாகவும், பொதுவாக அது தீமையான ஒன்றாகவும் நாம் பார்க்கிறோம்.

வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி, நடனத்தைக் குறித்து சில காரியங்களை நாம் கவனிக்க வேண்டும். **முதலில்**, தேவனுடைய ஜனங்கள் நடனமாடுவதை வழக்கமாக கொண்டிருக்கவில்லை. அது சிறப்பான தருணங்களில் மட்டுமே செய்யப்பட்டது !

**இரண்டாவது,** அது பகல் நேரத்திலே செய்யப்பட்டது ! **மூன்றாவது,** அது இன்பத்திற்காக எப்பொழுதுமே செய்யப்படவில்லை, மாறாக, மதசம்பந்தமான தியானத்திற்காகவே செய்யப்பட்டது ! இறுதியாக, தேவனுடைய ஜனங்கள் எப்பொழுதுமே தனிமையாகவே நடனமாடினர். இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு, கீழ்வரும் நான்கு வசனப்பகுதிகள் தான்.

யாத் 32 : 1 – 21 ; I சாமு 30 : 16 –17 ; யோபு 21 : 11 – 15 மற்றும் மத் 14 : 1 –7. இந்த வேதவசனங்களில் எதுவுமே, தேவனுடைய ஜனங்களோடே தொடர்புடையது அல்ல.

நிச்சயமாகவே கலா 5 : 19 – 21, போன்று உள்ள வசனங்களை, நடனமாடுதல் என்னும் செயல், மீறுகிறது. வசனம் 19ல் பவுல் மாம்சத்தின் கிரியைகளாகிய சில செயல்களை குறிப்பிடுகிறார்; அதில் ஒன்று ''காமவிகாரம்''. அதற்கு இச்சையான அல்லது தெய்வபக்தியில்லாத வகையில் உடலை அசைப்பது என்றும் ; கற்பில்லாமல் ஆணும் பெண்ணும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது என்றும் அர்த்தமாகும். மேலும் வசனம் 21ல் அவர் ''களியாட்டம்'' என்று குறிப்பிடுகிறார். அதற்கு, "குடித்துவிட்டு இரவுமுழுவதும் நடனமாடுவது " என்று அர்த்தமாகும். மேலும் 21ம் வசனத்திலேயே அவர், ''முதலானவைகளே'' என்றும் குறிப்பிடுகிறார். ரோமர் 12 : 2 ல் பவுல் கூறுகையில், ''நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்," என்கிறார். ஆனாலும் இன்று நடனத்தில் ஈடுபடும் அனைவருமே, தங்களை இந்த உலகத்தின் சாயலுக்கு ஒப்பாகவே மாற்றியுள்ளனர். உங்களைப்பற்றி என்ன? இன்று கிறிஸ்தவ பாடல்களுக்கும் கூட, உலக பானியிலேயே நடனம் ஆடப்படுகிறது. இதனை TV யில் தினமும் பார்க்கிறோம். இத்தகைய செயல், பார்ப்போருக்கு எந்தவித ஆவிக்குரிய சிந்தையையும் கொடுக்காது. இதுவும் கூட, காமவிகார எண்ணத்தை தூண்டுவதாகவும், களியாட்டாகவுமே இருக்கிறது. ஆவிக்குரிய பாடல்களுக்கு நடனமாடுவதும் மாம்சத்தின் கிரியையே! சிந்திப்பீர் வாலிபரே!

**கிறிஸ்த வாழ்வு என்பது ஓட்டபந்தயத்தோடு ஒப்பிடபடுகிறது. ஆகையால் நாம் பரிசை (ஜீவகிரிடம்) பெறும் வரை வசனத்தின்படி ஓடுவோம். (1 கொரி 9:24-26)**

# கண்டுபிடிங்க பார்ப்போம்!

## வேதாகம தந்தைகளையும் அவர்களுடைய மகன்களையும் பொருத்துக

1. ஆதாம் – யாக்கோபு, ஏசா
2. நோவா – காயீன் , ஆபேல்
3. ஆபிரகாம் – யாக்கோபு , யோவான்
4. ஈசாக்கு – சேம், காம், யாப்பேத்
5. யாக்கோபு – ஓபேத்
6. நூன் – மோசே, ஆரோன்
7. அம்ரா – இஸ்மவேல், ஈசாக்கு
8. போவாஸ் – யோவான் ஸ்நானகன்
9. செபதேயு – யோசேப்பு மற்றும் 11 சகோதரர்கள்
10. எல்கானா – யோனத்தான்
11. ஈசாய் – சவுல்
12. சவுல் – சாலொமோன்
13. தாவீது – யோசுவா
14. சகரியா – சாமுவேல்
15. அபீயேல் – தாவீது

கண்டுபிடிக்க கடினமாக இருந்தால் கீழே உள்ள வசனப்பகுதிகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

(ஆதி : 4 : 1, 2, ஆதி : 6 : 10, ஆதி : 16 : 15, ஆதி : 25 : 24- 26, ஆதி : 35 : 22- 26, யோசு 1 : 1 எண்ண 26 : 59, ரூத் 4 : 21, மத் 4 : 21, I சாமு 1 : 19, 20, I சாமு 16 : 11 –13, I சாமு 13 : 16, II சாமு 12 : 24, லூக்கா 1 : 59, 60, I சாமு 9 : 1,2)

**– சகோதரி. பெவர்லி கிங்ஸ்லி**

- ❖ பார்வையற்றோர், முதியவர்கள் சாலையை கடக்க உதவுங்கள்.
- ❖ புத்தாண்டில் உங்கள் சந்தோஷங்களை ஏழை, எளியவருடன் பகிருங்கள்.
- ❖ ஆம்புலன்ஸ், தீயணைப்பு வண்டிகளுக்கு வழிவிடுங்கள்.
- ❖ வருமானவரி, வீட்டுவரி, குழாய் வரி போன்றவற்றை தவறாது செலுத்துங்கள்.
- ❖ லஞ்சம் மற்றும் வரதட்சணையை வாங்காதிருங்கள்.
- ❖ வாகனம் ஓட்டிக்கொண்டே செல்போன் பேசாதீர்கள்.

# ஏழைகளுக்கு சேவை செய்தல் (கலா 6:2)

"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்"

பிரியமானவர்களே ! வேதாகமம் முழுவதுமே நம்முடைய தேவன், ஏழை எளியோருக்கு உதவுவது, திக்கற்றவர்கள் மற்றும் விதவைகளை ஆதரிப்பது மற்றும் மற்றவருடைய பாரத்தை சுமப்பது ஆகியவற்றை வலியுறுத்துகிறார். இவைகள் அனைத்தும் நாம் விரும்பினால் செய்யும்படியான விருப்பத்தேர்வு அல்ல; மாறாக, கிறிஸ்துவின் பிரமாணமாகவும் (கலா 6:2), செய்யாதவருக்கு ஒரு குறையாகவும் (லூக் 18:22) வேதாகமத்தினால் அடையாளம் காட்டப்படுகிறது.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உள்ள கீழ்வரும் வசனப் பகுதிகளை நீங்களே வாசித்துப் பார்த்து, இந்த விஷயத்தில் ஒரு முடிவு செய்யுங்கள் !

உபா 15:11 – "தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு, உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்."

யாக் 1:27 – "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாத படிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது."

## ஏசாயா 58:10,11

**"பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால்** அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்திமகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; **நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்".**

# கர்த்தர் யோசேப்புடன் கூட இருந்தார்

**ஆதி 39 : 2 – 9**

**அறிமுகம் :**

அ) கர்த்தர் நம் வாழ்வில் நம்முடன் இருக்கிறார் என்பதை அறிவது மிகப்பெரிய ஆறுதலே.

ஆ) ஏன் கர்த்தர் யோசேப்புடன் இருந்தார்? **ஏனெனில்:**

**1. யோசேப்பு, பாவத்தின் கவரக்கூடிய வழிகளை அறிந்திருந்தார்.**

அ) ஆதி 39:7

ஆ) நீதி 6:24, 7:10

**2. யோசேப்பு, "இல்லை" என்றார்; மேலும் அதை உண்மையாகவே கூறினார்.**

அ) ஆதி 39:7

ஆ) தானி 1:8

**3. யோசேப்பு, நம்பிக்கை துரோகம் செய்ய விரும்பவில்லை.**

அ) ஆதி 39:8,9

ஆ) பிலி 4:8,9

**4. யோசேப்பு, சில காரியங்கள் தன்னுடையதல்ல என அறிந்திருந்தார்.**

அ) ஆதி 39:8

ஆ) எபி 11:24,25

**5. யோசேப்பு அது பாவம் என அறிந்திருந்தார்.**

அ) ஆதி 39:9

ஆ) யாக் 4:17

**6. யோசேப்பு, அது தேவனுக்கு விரோதமான பாவம் என அறிந்திருந்தார்.**

அ) ஆதி 39:9

ஆ) சங் 51 : 1-4

**முடிவுரை :**

அ) யோசேப்பின் இத்தகைய குணத்தை இன்று நாம் கொண்டிருப்போமானால் கர்த்தர் நம்மோடிருப்பார்.

ஆ) இத்தகைய பண்புகள் உங்களிடம் இருக்கிறதா?

இ) கர்த்தர் உங்களோடிருக்கிறாரா?

## ஆசிரியரின் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

**டிசம்பர்** 3ம் வாரம் – திண்டுக்கல்

4ம் வாரம் – மதுரை

**ஜனவரி** 1ம் வாரம் – கொச்சின்

2ம் வாரம் – திருப்பதி

நமது ஆசிரியரின்

பிரயாணங்களுக்காக ...

உடல் ஆரோக்கியத்திற்காக ...

அந்தந்த பகுதியின் நடைபெறும்

வகுப்புகளுக்காக, கூட்டங்களுக்காக ...

அநேகர் இரட்சிக்கப்பட ...

தேவைகள் சந்திக்கப்பட ...

# Gospel Through Media by World Evangelism Team

- **Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :**
  Every Sunday 6.45 - 7.00 a.m and Every Friday 6-00 a.m . - 6-30 a.m.
  (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)***
- **Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV**
  Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m.
  and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382
- **Arjunan in Tamil on Tamilan TV & Radio :**
  TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m.
  Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio.
  (TAMILNADU Contact Mobile : 94435 58041)
- **Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :**
  Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m.
  **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m.
  (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)
- **P.R. Swamy & Douglas in Tamil on Radio :**
  Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band
  of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)
- **P.K. Varghese in Malayalam on JaiHind TV**
  Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.
  (KERALA Contact Mobile : 94470 35465)
- **Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :**
  Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.
  (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# 1 லாசரும் ஐசுவரியவானும்

Hi, குட்டீஸ், இந்த மாதம் இயேசு சொன்ன ஒரு உவமையைப் பற்றி தெரிந்து கொள்ளலாமா?

ஒரு ஊர்ல ஐசுவரியவான் (பெரிய பணக்காரன்) இருந்தானாம். அவன் விலையுயர்ந்த Dressம், வகை வகையான சாப்பாடும் சாப்பிட்டு ரொம்ப ஆடம்பரமா வாழ்ந்துகிட்டிருந்தான். அவன் வீட்டு வாசல்கிட்டேயே, ஏழையான, பருக்கள் நிறைந்த, லாசரு என்ற அண்ணனும் வாழ்ந்தானாம். ஏழை லாசரு, அந்த ஐசுவரியவானுடைய சாப்பாட்டு எச்சிலை சாப்பிட்டு வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் லாசருவும் இறந்துபோறான். ஐசுவரியவானும் இறந்துபோறான்.



லாசரு அண்ணே, தேவதூதரால ஆபிரகாமின் மடியில் கொண்டுபோய் விடபடுகிறார். ஆனால் அந்த ஐசுவரியவானோ வேதனைப்படுகிற இடத்திற்கு கொண்டு போகப்படுகிறான்.

அந்த ஐசுவரியவான் நம் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: எனக்கு 5 சகோதரர்கள் இருக்காங்க. அவர்களும் இந்த இடத்திற்கு வந்து வேதனைப் படாதபடிக்கு லாசருவை அவர்களுக்கு சாட்சியாக அனுப்புங்க என்று கேட்கிறான்.

அதற்கு ஆபிரகாம்: அவர்களுக்கு தீர்க்கதரிசிகள் இருக்காங்க. அவர்களுக்கும் உன் சகோதரர்கள் கீழ்ப்படியலைனா, மரித்த ஒருத்தன் போனாலும் கேட்கமாட்டாங்க என்று சொன்னார்.

பார்த்தீங்களா குட்டீஸ் ! அந்த தீர்க்கதரிசிகள் போலதான் நாமும், இயேசுவைப்பற்றி சொல்ல தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். நாம் சொல்லவில்லையென்றால், அந்த ஐசுவரியவானை போல இயேசுவை அறியாதவர்களும் வேதனைப்படுகிற இடத்திற்குதான் போவாங்க. என்ன குட்டீஸ்? இயேசுவை அறியாதவர்களுக்கு அவரைப்பற்றி சொல்வீங்கதானே?

**– குயினி பிலேமோன்**

# 2 காணாமல் போன ஆடும், வெள்ளிக்காசும்

ஹலோ குட்டீஸ் ! இந்த நேரம் நீங்கள் மிகவும் பரபரப்பாக அரையாண்டுத் தேர்வுக்கு (Half Yearly) ஆயத்தமாகி, எழுதிக்கொண்டிருப்பீர்கள். உங்கள் அனைவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், ஞாபக சக்தியையும் தர நாங்கள் ஜெபிக்கிறோம்.

பொதுவாக தேர்வு நேரங்களில் புக், நோட், பேனா அல்லது ஏதாவது ஒன்றை எங்கோ வைத்துவிட்டு தேடுகிற பழக்கம் உங்களுக்கும் உண்டுதானே? இன்னைக்கு நாம, காணமல் போனதை தேடி கண்டுபிடிக்கிறதை பற்றி ஆண்டவர் இயேசு சொன்ன உவமையை பற்றி தெரிஞ்சுக்கலாமா ?

உங்களில் ஒருவனுக்கு நூறு ஆடு இருந்து, அதில் ஒன்று காணாமல்



போய்விட்டதென்றால் மற்ற தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் ஓரிடத்தில் விட்டுவிட்டு, காணாமல் போன ஒரு ஆட்டைத் கண்டுபிடிக்கும் வரை தேடி திரிந்து, அதை கண்டுபிடித்த பின் அதை தன் தோளிலே போட்டுக்கொண்டு தன் நண்பர்களாடே சேர்ந்து சந்தோஷப்படுவார் அல்லவா ? அதே போல ஒரு பெண்ணிடத்தில் பத்து வெள்ளி காசு இருந்து, அதில் ஒன்னு காணாமல் போனால், வீட்டை பெருக்கி வீடு முழுவதையும் தேடி அதை கண்டுபிடித்த பின்பு தன் பக்கத்து வீட்டக்காரர்களிடம் சொல்லி சந்தோஷப்படுவார் அல்லவா ? அதே போல, கடவுளுக்கு பிரியமாக வாழ மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாகும் என்று சொன்னார்.

குட்டீஸ் ! கவனித்தீர்களா ? நம்ம எல்லாருக்கும் எதையாவது தொலைந்துவிட்டதென்றால், அதை கண்டுபிடித்தால் சந்தோஷமாக இருக்கும் தானே ! இந்த உலகத்தில் இருக்கிற ஒவ்வொருவரையும் நம்ம பரலோக தேவன் தான் படைத்தார். அவுங்க எல்லாரும் அவரை விட்டு உலகத்தின் பின்னே போய் பாவத்தினால் காணாமல் போனவர்களாகிவிட்டனர். அதனால் உங்க நண்பர்கள் மற்றும் உறவினர்கள்

அனைவருக்கும் நம்ம ஆண்டவர பற்றி சொல்லி, அவர்களை ஆண்டவரிடம் கூட்டி வந்து, நம்மல படைச்ச தேவனை சந்தோஷப்படுத்தலாமா? நீங்க செய்வீங்க தானே ?

**மனன வசனம் :** மத்தேயு 18 : 14

இவ்விதமாக இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல.

# பாடம் 3 திட்டமிட்டுச் செயல்படுங்கள்

**(லூக் 14 : 28 to 32)**

கடவுளின் செல்லப் பிள்ளைகளே ! உங்கள் யாவரையும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன். இப்பத்திரிக்கை மூலமாக நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்ன உவமையிலிருந்து முக்கியமான பாடத்தை தெரிந்துக் கொள்ளப் போகிறீர்கள். தெரிந்துக்கொள்ளலாமா? இயேசு யூதர்களைப் பார்த்து ஒரு உவமையை சொன்னார்

உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தை கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரமும் போட்டுவிட்டு, பின்பு அதை கட்டி முடிக்க திராணியில்லை என்றால், ‘இந்த மனுஷன் கோபுரத்தை கட்டத் துவங்கினான், ஆனால் இவனால் அதை கட்டி முடிக்க முடியவில்லை’ என்று பரியாசம் செய்வார்கள். உண்மைதானே?



ஒரு இராஜா இருந்தாரு. அந்த இராஜா மற்றொரு இராஜாவோடு சண்டைப் போட போகிறதற்கு முன்பு, 20 ஆயிரம் எதிரி சேவகரோடு, தன்னிடம் உள்ள 10 ஆயிரம் சேவகரைக் கொண்டு சண்டைப் போட்டு ஜெயிக்க முடியுமா ? என முன்பே திட்டமிட்டு போருக்குப் போவார்; எனவே எந்த ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பும் திட்டமிட்டு செயல்பட வேண்டும் என்று போதித்தார்.

செல்வங்களா ! புது வருடத்தைச் சந்திக்கப்போகிறீர்கள்; நீங்கள் செய்யப்போகும் எல்லாவற்றையும் திட்டமிடுங்கள்!

பைபிள் படிக்க எவ்வளவு நேரம் செலவு செய்யப் போகிறீர்கள்? ஜெபிப்பதற்கு எவ்வளவு நேரம் செலவு செய்யப் போகிறீர்கள்? இயேசுவைப்பற்றி அறியாதவர்களுக்கு, கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1 கொரி 15 : 3,4) என்று சொல்வதற்கு எவ்வளவு நேரம் செலவு செய்யப்போகிறீர்கள்? என திட்டமிட்ட செயல்படுங்கள் கர்த்தர் உங்களையும், நீங்கள் திட்டமிட்டு செய்பவைகளையும் ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம்**: சங் 37:5

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு ; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

**– அன்பு ஏசுதாஸ்**

## பாடம் 4 மன்னிப்பு

ஹாய் செல்லங்களா ! நல்லா இருக்கிங்களா? நீங்க நல்லபடியாக Half Yearly Exam எழுத நாங்க ஜெபிக்கிறோம். அதனால், தைரியமாக நல்லபடித்து எழுதுங்க. நாம் இந்த மாதம், ஆண்டவர் மன்னிப்பை பற்றி சொன்ன ஒரு உவமையைப் பற்றி படிக்கலாமா?



ஒருமுறை ஆண்டவர் இயேசு, தன்னுடைய சீடர்களிடத்தில் பேசிக்கொண்டிருத்தப்ப, பேதுரு வந்து ஆண்டவரே! என் சகோதரன் எனக்கு விரோதமாய் குற்றம் செய்தால், நான் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் ? ஏழு முறை மட்டுமோ ? என்று கேட்டார். அப்பொழுது ஆண்டவர், ஏழு முறைமட்டும் அல்ல ஏழுபது முறை மன்னிக்க வேண்டும் என்று சொல்லி, அவர்களுக்கு ஒரு உவமையை சொன்னார்.

பரலோக ராஜ்யம் தன் வேலைக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்

பார்க்கத் தொடங்கினபோது, பத்தாயரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்க முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத் தீர்க்க அவனுக்கு வசதி இல்லாதபடியால், அந்த ராஜா அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக்கு கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த வேலைக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே ! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். உடனே ராஜா இரக்கப்பட்டு, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அந்த வேலைக்காரன் தன் வீட்டுக்கு புறப்பட்டுப் போனான். அப்படி போற வழியில், அவனிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்த தன்னுடன் வேலை செய்கிறவனைக் பார்த்தான். உடனே அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து : நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அவனை காவலில் போடுவித்தான். இந்த விஷயங்களை எல்லாம் மற்ற வேலைக்காரர்கள் ராஜாவினிடத்தில் வந்து சொன்னார்கள். அப்பொழுது, ராஜா அந்த வேலைக்காரனை அழைத்து, பொல்லாத ஊழியக்காரனே! நீ என்னை வேண்டிக்கொண்டபோது நான் உனக்கு இரங்கி மன்னித்தேனே! நீ உன்னுடன் வேலைப் பார்க்கிறவனை மன்னிக்காமல் தண்டித்த விட்டாய் என்று சொல்லி, அந்த வேலைக்காரனை, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும், உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.

செல்லங்களா ! நாம் செய்த தப்பை எல்லாம், வருந்தி மன்னிப்பு கேட்கிறப்ப, தேவன் நம்மீது இரக்கப்பட்டு நம்மை மன்னிக்கிறவாராயிருக்கிறார். ஆகையால் நாமும் அவரைபோலவே மன்னிக்கிறவர்களா இருக்கனும். நீ உன் நண்பர்கள், மற்ற யாருடனாவது சண்டை போட்டு பேசாமல் இருந்தால், அவர்களிடம் சென்று மன்னிப்பு கேள். அவர்கள் செய்தது தான் தப்பாக இருந்தால் அவர்களை மனதார மன்னித்துவிடு. நீங்க செய்வீங்கதானே !

**மனன வசனம் :** எபேசியேர் 4 : 32

ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

**– பிரியா ஆண்டனி**

## இம்மாதக் கேள்விகள்

1. கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் என்ன செய்யக்கூடாது ?
2. களங்கமில்லாத நளதத்தை இயேசுவின் பாதத்தில் பூசி, தன் தலைமயிரால் துடைத்தவள் யார் ?
3. இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை எங்கே ?
4. பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் எப்படி இருப்பார்கள் ?
5. “உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களை திருப்புங்கள் ”. யார் யாரிடம் சொன்னது ?
6. நாம் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் என்ன செய்ய வேண்டும் ?
7. நாமெல்லாரும் முற்காலத்திலே மாம்ச இச்சைகளின்படி நடந்து, எவைகளை செய்தோம் ?
8. ‘கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்’ என வாசிப்பதெங்கே ?
9. ‘இச்சிறியரில் ஒருவனுக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்’ என்றவர் யார் ?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-01-2015**

## சிறுவர்க்கான கேள்விகள்



1. எந்த ஒரு காரியத்தையும் திட்டமிட்டு செய்ய வேண்டும் என போதித்தது யார் ?
2. புத்தாண்டில் ஆண்டவருக்காக உன்னுடைய திட்டங்கள் என்ன ?
3. எத்தனை ஆடு, வெள்ளிக்காசு காணாமல் போனது ?
4. யார் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும் ?
5. நம்மை படைத்த தேவனை சந்தோஷப்படுத்த, நீ என்ன செய்ய போகிறாய் ?
6. நாம் இயேசுவைப் பற்றி சொல்லாவிட்டால், அவரை அறியாதவர்கள் எங்கே செல்வார்கள் ?
7. நாம் மற்றவர்கள் செய்த தவறுகளை என்ன செய்ய வேண்டும் என இயேசு சொன்னார்?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-01-2015**

அனுப்ப வேண்டிய முகவரி :

சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

1. உபா 7:6
2. 2 கொரி 5:10
3. அப் 5:9
4. கொலே 3:12
5. 1 பேதுரு 1:15
6. யோவா 8:44
7. நீதி 6:16,17
8. எபி 12:14
9. 1 தெச 4:7
10. எபே 4:25

## நவம்பர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. G. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
2. Mrs. மேரி ராஜ் – மதுரை
3. S. ஜெயராஜ் – கோவை
4. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
5. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
6. Mrs. குளோரி பால்ராஜ் – தஞ்சை
7. Mrs. ராஜம்மாள் – திருப்பூர்
8. P. மேபல் சித்ரா – திருச்சி
9. G. பீட்டர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
10. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
11. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
12. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
13. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
14. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
15. Mrs. A. சந்திரா – மதுரை
16. R. பால் ஜெயராஜ் – சென்னை
17. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
18. Mrs. ஜெபசீலி ஜெயகொடி – திருச்சி
19. Mrs. G. மல்லிகா – மதுரை
20. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
21. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
22. Mrs. ஹெலன் திலக் – மதுரை
23. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
24. R. சரோஜா – தென்கலம்
25. Mrs. ஜான் செல்லையா – மதுரை
26. Mrs. ஜெயராணி ஜான் – மதுரை
27. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
28. Mrs. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
29. M. புஸ்பராணி – நாமக்கல்
30. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
31. J. விஜய் – வளர்நகர்
32. Y. ஜெயசுதா – சென்னை
33. N. ஞானசுந்தரி நாகராஜன் – நெல்லை
34. C. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
35. X.R. அலெக்ஸ் ஜெர்சன் – சென்னை
36. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
37. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை

## வாலிபர்பகுதி பதில் எழுதியவர்கள்

1. R. சரோஜா – தென்கலம்

## சிறுவர் பகுதியில் பதில் எழுதியவர்கள்

1. V. கெவின் கேப்ரியல்ராஜ் – மதுரை
2. V.B. கௌசந்த் – திருப்பூர்
3. R. சுஜின் தாஸ் – கன்னியாகுமரி
4. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
5. D. டேஃப்னி – சென்னை
6. D. ஜ்னித்தா – சென்னை
7. R. கர்மைக்கேல் தாஸ் – சென்னை
8. J. லாசர் – மணப்பாறை
9. J. புஸ்பராஜ் – மணப்பாறை

## சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. D. டேனியேல் – மதுரை
2. Mrs. பிலோமினா பிரபாகர– காரைக்கால்
3. Y. ஜெயசுதா – சென்னை
4. Ira. எத்திராசன் – சங்கரி
5. R. சரோஜா – தென்கலம்
6. Mrs. மெர்ஸி ரூபஸ் – சேலம்
7. D. டேஃப்னி – சென்னை
8. D. ஜ்னித்தா – சென்னை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

# சென்றமாத ஊழியங்கள்





குன்னூரில் ஆத்தும ஆதாய பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பு நடைபெற்றது

திருமுழுக்கு பெறுபவர்களுக்கு வகுப்பு எடுக்கும் நமது ஆசிரியர். திருமுழுக்கு பெற்ற 82வயது முதிர்ந்த சகோதரன்





பார்வையற்றோருக்கு மாதந்தோறும் அரிசி வழங்கப்படுகிறது.

கொச்சியில், மாதந்தோறும் நடைபெறும் ஆத்தும ஆதாய பயிற்சியின்போது

## நமது தபால் வழி பைபிள் பாடங்களை முடித்து, நேரில் வந்து சான்றிதழ், பைபிள் பரிசு பெற்றவர்கள்.











Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2001/14161
Postal Registration No. : MA/67/2012-2014
Posted at Arasaradi HPO on 10th, 11th December 2014


## கிருபையுள்ள வார்த்தை வெளியீடுகள்














அன்பார்ந்த வாசகர்களே!
இந்த அனைத்து புத்தகங்களையும்
உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு
பயன்படுத்திக்கொள்ளும்படி
வேண்டுகிறோம். ரூபாய் 200/-மட்டும்
அனுப்பி இப்புத்தக தொகுப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்!

***If undelivered please return to :***

EDITOR
KIRUBAIYULLA VARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street,
Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421
92 4431 4431

To